மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை – 2019
கர்நாடக சங்கீதம்

தரம்: 11 **சுட்டெண்:.....** **நேரம்: 3 மணித்தியாலங்கள்**

பகுதி I

கவனிக்க வேண்டியவை

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக.

1. நீண்ட ஆலாபனையைக் கொண்டதாகவும் பாடல்களில் சொற்கள் குறைவானதாகவும் கொண்ட இசை
   1. மேலைத்தேசஇசை
   2. கர்நாடகஇசை
   3. ஹிந்துஸ்தானிஇசை
   4. ஹார்மனிஇசை

2. தகிடதகதிமி எனும் ஜதிச்சொல் குறிக்கும் நடை
   1திஸ்ரநடை 2.கண்டநடை 3.சதுஸ்ரநடை 4. மிஸ்ரநடை

3. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இடம் பெறும் வாத்தியங்கள்
   1. தாளம், தவில், புல்லாங்குழல்
   2. உடுக்கை, டோலக், வயலின்
   3. ஹார்மோனியம் தவில் கடம்
   4. உடுக்கை ஹார்மோனியம் மிருதங்கம்

4. எத்துக்கடை பல்லவி எனும் அங்கத்தினை எடுத்துக் கொள்ளும் உருப்படி
   1.கீர்த்தனை 3. வர்ணம் 2. தில்லானா 4.கீதம்

5. லங்கர் என்னும் பாகத்தினை கொண்ட வாத்தியம்
   1. வயலின் 2. தம்புரா 3. வீணை 4. மிருதங்கம்

6. திருத்தாண்டகம் பாடுவதற்கேற்ற இராகம்
   1. மலஹரி 2. ஹரிகாம்போதி 3. தோடி 4. ஹரஹரப்ரியா

7. திராட்சை இரசத்திற்கு ஒப்பான கிருதிகளை இயற்றிய வாக்கேயகாரர்
   1. சியாமாசாஸ்திரிகள்
   2. அருணாசலக்கவிராயர்
   3. முத்துஸ்வாமிதீட்சிதர்
   4. தியாகராஜஸ்வாமிகள்

8. 72 மேளகர்த்தா அமைப்பு பற்றி வேங்கடமகியால் இயற்றப்பட்ட நூல்
   1. சங்கீத சாராம்ருதம்
   2. சதுர்த்தண்டிப்பிரகாசிகை
   3. சங்கிரகசூடாமணி
   4. சங்கீத சம்பிரதாய பிரதர்சினி

www.lkedu.lk

நாட்டின் எப்பாகத்திலிருந்தும்
கற்பித்தல் அனுபவம் உள்ள திறமையான ஆசிரியர்களிடம்
கல்வி கற்க விரும்புகிறீர்களா

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

FB Page - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

9. வீணை வாசிப்பதில் பிரபல்யம் பெற்ற வித்துவான்கள்
   1. ரி.ஏன்.கிருஸ்ணன், குன்னக்குடி வைத்தியநாதன், லால்குடி ஜெயராமன்
   2. வீணை தனம்மாள், எஸ்.பாலசந்தர், சிட்டிபாபு
   3. மகாலிங்கம், ரமணி ரி.ஆர்.நவநீதம்
   4. பாலக்காடுமணிஐயர் , தஞ்சாவூர் வைத்தியநாதஐயர் , கோவிந்தபிள்ளை

10. தானவர்ணத்தில் உபபல்லவி என்றழைக்கப்படும் அங்கம்
    1. பல்லவி 2. அநுபல்லவி 3. முக்தாயிஸ்வரம் 4.சரணம்

11. ஸ்வரமேளகலாநிதி எனும் சமஸ்கிருத நூலை எழுதியவர்
    1. பத்ராசலராமதாஸர் 2. பச்சிமிரியம்ஆதியப்பையர்
    3. இராமாமாத்தையர் 4. அருணாசலக்கவிராயர்

12. தேவார திருப்பதிகங்கள் திருமுறைகளாக வகுக்கப்பட்ட காலம்
    1. மகேந்திரவர்மன்காலம் 2. சரபோஜிமகாராஜாகாலம்
    3. ரகுநாதமன்னர்காலம் 4. இராஜராஜசோழன்காலம்

13. மிருதங்கவாத்தியத்தின் மூட்டினை இழுத்துப்பிணைக்கும் வார்களின் இடைவெளியில் வைக்கும் மரத்துண்டிற்கு பெயர்
    1. புள் 2. தொப்பி 3. கரணை 4. ஆரடா

14. இசை நாடகத்தினை தயாரித்து மேடையேற்றுவதன் மூலம் வெளிப்படும் திறன்
    1. விமர்சனத்திறன் 2. பாடுந்திறன் 3. ஆக்கத்திறன் 4. எழுத்துத்திறன்

15. தானவர்ணமார்க்கதர்சி என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர்
    1. மானம்பூசாவடி வேங்கடசுப்பையர் 2. பச்சிமிரியம் ஆதியப்பையர்
    3. டைகர் வரதாச்சாரியார் 4. இராமநாதபுரம் ஸ்ரீனிவாசஐயங்கார்

16. பந்துவராளி இராகத்தின் மத்திமத்தினை கோமளஸ்வரமாக்கினால் வரும் இராகம்
    1. மாயாமாளவகௌளை 2, கீரவாணி 3. தோடி 4. சங்கராபரணம்

17. லட்சியச ங்கீதப் பொலிவின்த ன்மை முழுமையாக வளர்ச்சியுற அஸ்திவாரமாக அமைந்த காலம்
    1. 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டு 2. 7ஆம் 8 ஆம் நூற்றாண்டு
    3. 19 ஆம் 20 ஆம் நூற்றாண் 4. 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டு

18. தரிசனம் செய்வேனே என்ற கீர்த்தனையை இயற்றியவர்
    1. கோபாலகிருஸ்ணபாரதியார் 2.. முத்துத்தாண்டவர்
    3. அருணாசலக்கவிராயர் 4.. புரந்தரதாஸர்

19. இராஜவாத்தியம் என்று சிறப்புப் பெயர் பெறும் வாத்தியம்
    1. வீணை 2. வயலின் 3. தம்புரா 4. தவில்

20. பண் கொல்லிக்கு ஒப்பான கர்நாடக இசை இராகம்
    1. நாதநாமக்கிரியை 2. கேதாரகௌளை 3. காம்போதி 4. நவரோஜ்

www.lkedu.lk

21. "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற உருப்படி
1. வர்ணம் 2. கீர்த்தனை 3. இராகமாலிகை 4. பதம்

22. * 0 / இவ் அடையாளங்கள் குறிப்பது
1. அனுதுருதம், துருதம், இறக்கஜாரு 2. துருதம், பாஸாங்கம், ஏற்றஜாரு
3.அன்னியஸ்வரம், துருதம், ஏற்றஜாரு 4. கமகம், பாஸாங்கம், இறக்கஜாரு

23. ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுவது
1. புராணம் 2. திருவாசகம் 3. திருப்பல்லாண்டு 4. திருப்பாவை

24. தோஷி நிவர்த்திக்குரிய இராகம்
1. மத்தியமாவதி 2. மோகனம் 3. கல்யாணி 4. ஹரஹரப்ரியா

25. ஞானச்சிந்து, ஞானக்கும்மி என்பவற்றை இயற்றிய வாக்கேயகாரர்
1. அருணாசலக்கவிராயர் 2. முத்துத்தாண்டவர்
3. கோபாலகிருஸ்ணபாரதியார் 4. பாபநாசம்சிவன்

26. வாத்திய இசையைக் கேட்கும் போது அவ் வாத்திய இசையை இனங்காண உதவுவது
1. வாசிக்கும் கலைஞனின் கற்பனைத்திறன்
2. அவற்றின் தனித்துவமான ஒலிப்பண்பு
3. வாசிக்கப்படும் உருப்படிகள்
4. பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிச் சாதனங்கள்

27. இராமாலிகையின் ஒவ்வொரு இராகத்தின் முடிவிலும் பல்லவியின் ஆரம்ப இராகத்தில் அமையும் சிட்டைஸ்வரத்திற்குரிய பெயர்
1. கற்பனாஸ்வரம் 2. மகுடசாகித்தியம் 3. மகுடஸ்வரம் 4. முக்தாயிஸ்வரம்

28. ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிக்கும் போது அவதானிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்
1. வாத்தியங்களின் ஒத்திசைவு, நிகழ்ச்சியின் தரம்
2. நிகழ்ச்சியின்தரம், இரசித்தலால் பெறும் அனுபவம், வாத்தியங்களின் பங்கு
3. தபேலாவின் ஒத்திசைவு, மிருதங்கத்தின் ஒத்திசைவு, பாடலின் தரம்
4. கிற்றார் வாத்தியத்தின் தரம், தபேலா வாத்தியத்தின் தரம், வாத்தியங்களின் ஒத்திசைவு

29. தமிழ்ப்பதங்கள் இயற்றிய வாக்கேயகாரர்கள்
1. கஸ்தூரிரங்கர் , முத்துத்தாண்டவர் 2. ஷேத்ரக்ஞர் , கவிக்குஞ்சரபாரதி
3. மாம்பழக்கவிராயர் , சாரங்கபாணி 4. கவிக்குஞ்சரபாரதி , கனம் கிருஷ்ணய்யர்

30. மேலைத்தேச இசையில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களாவன
1. கிற்றார், ஓகன் 2. பியானோ, தபேலா 3. வீணை, ஓகன் 4. தம்புரா, ஹார்மோனியம்

31. ஸரபநந்தன தாளத்தில் பல்லவி பாடிய வாக்கேயகாரர்
1. தியாகராஜஸ்வாமிகள் 2. முத்துஸ்வாமிதீட்சிதர் 3. சியாமாசாஸ்திரிகள் 4. புரந்தரதாஸர்

32. வாத்தியத்திரயத்தில் இரண்டாவதாக இடம் பெறும் வாத்தியம்
1. வயலின் 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம் 4. வீணை

www.lkedu.lk

33. "கஞ்சதளாய தாட்சி" எனும் முத்துஸ்வாமி தீட்சதரின் கிருதி அமைந்துள்ள இராகம்
1. கமலாமனோஹரி 2. மாயாமாளவகௌளை 3. சங்கராபரணம் 4. யதுகுலகாம்போதி

34. கல்லினாலான நாதஸ்வரங்கள் காணப்படும் கோவில்கள்
1. திருமயம், திருவண்ணாமலை 2. தஞ்சைபெருங்கோவில், கும்பகோணம் கும்பேஸ்வரர்
3. திருச்செந்தூர், திருவண்ணாமலை 4. கும்பகோணம் கும்பேஸ்வரர், ஆழ்வார்திருநகரி

35. உத்க்ருஹம், த்ருவம், மேளபகம் ஆபோகம் என்னும் அங்கங்களைக் கொண்ட உருப்படி வகை
1. வர்ணம் 2. பதம் 3. பிரபந்தம் 4. இராகமாலிகை

36. பினவருவனவற்றில் மொத்த அட்சர எண்ணிக்கை 9 இனைக் கொண்ட தாளங்கள்
1. மிஸ்ரதுருவம், சங்கீர்ணரூபகம், மிஸ்ரதிரிபுடை
2. திஸ்ரமட்டியம், கண்டஜம்பை, சதுஸ்ரதிரிபுடை
3. கண்டரூபகம், திஸ்ரதிரிபுடை, மிஸ்ரஏகம்
4. மிஸ்ரரூபகம், கண்டதிரிபுடை, சங்கீர்ண ஏகம்

37. நேத்ர - ஸ்ரீ என அழைக்கப்படும் இராகம்
1. ஹரிகாம்போதி 2. தோடி 3. கல்யாணி 4. ஹரஹரப்ரியா

38. 16 ஸ்வரப்பெயர்களில் விவாதி ஸ்வரம் ஒலிக்கும் ஸ்வரஸ்தானம்
1. சதுஸ்ருதிதைவதம் 2. கைசிகிநிஷாதம் 3. ஷட்சுருதிதைவதம் 4. காகலிநிஷாதம்

39. சபாகான உருப்படிவகைகளில் அடங்காதது
1. கீரத்தனை 2. பதம் 3. தில்லானா 4. கீதம்

40.
A. ஆரோகணத்திலோ அல்லது அவரோகணத்திலோ ஸ்வரங்கள் கிரம கதியில் செல்லாமல் மாறி வரல்
B. ஆரோகணத்திலோ அல்லது அவரோகணத்திலோ ஸ்வரங்கள் வர்ஜமாக வருதல்
C. ஆரோகணம் அவரோகணம் இரண்டிலும் ஸ்வரங்கள் மாறி வரல்
D. மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாதிருத்தல்

மேல் வரும் கூற்றுக்களுள் வக்ர இராகத்திற்கு பொருத்தமான கூற்ற
1. A C 2. A D 3. B C 4. D C

(40x1 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை – 2019
கர்நாடக சங்கீதம்

தரம்: 11 **சுட்டெண்:.....** **நேரம்: 3 மணித்தியாலங்கள்**

பகுதி – 2

முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்கும் விடை தருக

1)
1. பஞ்சபுராணத்தில் திருவாசகத்திற்கு அடுத்ததாக பாடப்படுவது?
2. தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பிக்கும் எடுப்பு?
3. கனராக பஞ்சரத்தினக்கீர்த்தனைகளை தெலுங்கு மொழியில் இயற்றியவர்?
4. சக்கரத்திற்கு சக்கரம் மாறுபாடடையும் ஸ்வரங்கள் எவை?
5. இராகமுத்திரை காணப்படும் உருப்படி வகை ஒன்று ?
6. கர்நாடக இசைக்கு வயலினை அறிமுகப்படுத்தியவர்?
7. ஸ்வரங்களுக்கு மேல் இரண்டு புள்ளி இட்டு காண்பிக்கப்படுவது?
8. அசோகமுகி நாடகம் , ஹனுமார்பிள்ளைத்தமிழ் , சீர்காழிஸ்தலபுராணம் முதலானவற்றை இயற்றியவர்?
9. ஹரிகாம்போதி இராகத்தினை குறிக்கும் இரு பண்களும் எவை?
10. வீணை இசைபபதில் கைதேர்ந்தவர்களுக்குரிய சிறப்புப் பெயரையும் தவில் நாதஸ்வரம் இசைப்பவர்களுக்கரிய சிறப்புப் பெயரையும் குறிப்பிடுக?

(1+1+1+1+1+1+1+1+2+2+=12 புள்ளிகள்)

2) பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக
(உருப்படி, சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்)

1. ஹரஹரப்ரியா
2. மத்தியமாவதி
3. பந்துவராளி

(12 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டினைப் பற்றி விரிவான விளக்கத்தினை தருக
1. புதம்
2. ஜன்னியராகப்பிரிவுகள்
(பிரவுகளைக் கூறி அவற்றுள் இரண்டினை விளக்குக உதாரணம் தருக?
3. 12 ஸ்வரஸ்தானம் உருவாகும் முறையை விளக்கி 16 ஸ்வரப்பெயர்களையும் எழுதுக?

(6x2 = 12 புள்ளிகள்)

www.kalvi.lk

4) 1. பிடில் என்றழைக்கப்படும் வாத்தியம் எது?
2. இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
3. இவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி சுருதி சேர்க்கும் முறையினைக் கூறுக
4. இவ் வாத்தியத்தின் சிறப்பினை தொகுத்துக் கூறுக
5. இவ் வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் இருவரின் பெயர்களைத் தருக?

(1+4+3+2+2 = 12 புள்ளிகள்)

5) சியாமாசாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களிளைக் கருத்திற்கொண்டு எழுதுக

1. வாழ்க்கைகாலம்
2. பிறந்தஇடம்
3. இளமைக்கல்வியும் வாழ்க்கைச்சம்பவங்களும்
4. இசைப்பணிகள்
5. ஆபூர்வராகங்களில் இவர் செய்துள்ள கிருதிகள் மூன்று
6. முத்திரை, ரஸம்

(1+1+2+4+3 +1 = 12 புள்ளிகள்)

6) நீர் கற்ற ஆதி தாள வர்ணமொன்றின் உத்தராங்கப்பகுதியினை ஸ்வரசாகித்திய அங்க அடையாளங்களுடன் எழுதுக

(12 புள்ளிகள்)

7)

1. 72 மேளகர்த்தா பிரதிமத்திம மேளச்சக்கரங்களின் பெயர்களை எழுதுக
2. பிரம்ம சக்கரத்தில் வரும் இராகங்களையும் அதன் மேள எண்களையும் சங்கேதாட்சரங்களையும் எழுதுக?
3. அவ்விராகங்களின் ஸ்வரஸ்தானங்களைக் கிரமமாகத் தருக?

(3+3+6= 12 புள்ளிகள்)

அல்லது

இந்தியாவில் 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க?

(12 புள்ளிகள்)

www.lkedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள், செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில் இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu